இருக்கிறீர்கள். இந்தச் சபையிலே இருக்கிற ஓர் உறுப்பினருக்கு ஏதாவது ஒரு தொல்லை வருமேயானால், ஒரு பிரச்சினை வருமேயானால், நீதிமன்றத்திலே இருந்து ஒரு warrant வருமேயானாலும்கூட, சட்டமன்றம் கூடியிருக்கின்ற நாட்களில் தங்களிடம் கேட்காமலும், அனுமதி வாங்காமலும் அவர்களைக் கைது செய்ய முடியாது என்பதை நான் அறிவேன்.

அதேபோல உங்களுக்கு இருக்கிற அதிகாரத்தை நான் குறைத்து மதிப்பிடமாட்டேன். ஏனென்றால், தனிப்பட்ட முறையில், அரசியல் ரீதியாக இருக்கிற கருத்து வேறுபாடு என்பது வேறு. ஆனால், இந்த மன்றத்தினுடைய மாண்பு ஒருபோதும் குலைய வேண்டும் என்று நான் நினைத்ததும் இல்லை. நினைக்கவும் மாட்டேன். இந்த மன்றத்தின் மாண்பு காப்பாற்றப்பட வேண்டும். இறையாண்மை காப்பாற்றப்பட வேண்டும் என்பதிலே நான் தெளிவாக இருக்கிறேன். அதனாலேதான் டெல்லியிலே மக்கள் சபை சபாநாயகர் அன்றையதினம் கூட்டம் கூட்டியபோது நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்பதை நான் இதே அவையிலே எழுப்பியிருக்கிறேன். அதே தன்மையிலேதான் இதையும் எழுப்பியதாக நீங்கள் கொள்ள வேண்டுமே தவிர, இராஜினாமா செய்துவிட்டுத்தான் வரவேண்டுமென்று கட்டாயப்படுத்துவதற்காகவோ, அப்படி ஒரு கோரிக்கை வைக்கவேண்டுமென்ற நோக்கத்தோடோ நிச்சயமாக நான் இந்தப் பிரச்சினையை எழுப்பவில்லை என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். இன்னும் உங்களுடைய நிலையைத் தெளிவுபடுத்தியதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். நிலை தெளிவுபடுத்தப்பட வேண்டும், நாம் என்ன நிலையை மேற்கொள்ள இருக்கிறோம் என்று. ஒருவேளை அப்படி ஒரு நிலை வருமேயானால் என்ன செய்யப்போகிறோம் என்பதைத் தெரிந்துகொள்வதுதான் முறை. அதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்கிற நோக்கத்தோடு, சபைக்கும், சபையின் மூலமாக நாட்டுக்கும் தெரிய வேண்டுமென்பதற்காகத்தான் இதை நான் எழுப்பினேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) சுனாமியால் பாதிக்கப்பட்ட தேவனாம்பட்டினத்தில் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுவந்த திரு. விவேக் ஓபராய் பாண்டிச்சேரியில் பணிகள் மேற்கொள்வது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே நடந்த ஆழிப் பேரழிவு குறித்து நம்முடைய மரியாதைக்குரிய

2005 ஏப்ரல் 4] [திரு. ஜி.கே. மணி]

விவேக் ஓபராய் அவர்கள் கடலூர் மாவட்டம், தேவனாம்பட்டினத்திலே தங்கி, இரண்டு மாத காலமாக மீட்புப் பணிகளிலேயும், நிவாரணப் பணிகளிலேயும் ஈடுபட்டு வந்தார். அவருடைய சொந்தப் பணத்தைப் போட்டு, பல்வேறு தொண்டுள்ளம் படைத்தவர்களுடைய நிதியை எல்லாம் திரட்டி, தேவனாம்பட்டினத்திலே 300 வீடுகள், மதிப்பீடு 11 கோடி ரூபாய் என்று சொல்லி, அவற்றை மீனவர்களுக்காக வீடு கட்டித்தர முன்வந்த நேரத்திலே, நம்முடைய அரசு அந்த நிலத்தை ஒதுக்கிக் கொடுக்காத காரணத்தினாலே இப்போது பாண்டிச்சேரி மாநிலம், காரைக்கால் அருகிலே இருக்கிற ஒரு கிராமத்திற்கு, பட்டினச்சேரி கிராமத்திற்குச் சென்றிருக்கிறார். ஆகவே, நம்முடைய மாநிலத்திற்கு தேவையான பல்வேறு நிவாரண உதவிகளை தொண்டுள்ளம் படைத்தவர்களை, தொண்டு நிறுவனங்களை அழைத்துப்பேசி, உதவிகளைப் பெறக்கூடிய தமிழக அரசு இந்த உதவியைப் பெற ஏன் தவறி விட்டது? அதிலும் குறிப்பாக அரசு நிலம் கொடுக்காத காரணத்தினாலே தவறிப் போயிருக்கிறது என்ற இந்த மாபெரும் குற்றச்சாட்டினை இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவேக் ஓபராய் அவர்கள் நடத்திய அந்த நிகழ்ச்சியில் நானும், கல்வித் துறை அமைச்சர் அவர்களும்கூட கடலூரிலே நிவாரணப் பணிகளிலே ஈடுபட்டபோது கலந்துகொள்ளக்கூடிய ஒரு சூழல் ஏற்பட்டது. அவர் அங்கு அரசுக்குச் சொந்தமான இடத்தில்தான் அவற்றை எல்லாம், அந்தத் தற்காலிகக் குடியிருப்புகளை எல்லாம் அமைத்திருக்கிறார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் நேரில் சென்று பார்த்தாலே நன்கு தெரியும். வேறு பிரத்தியேக இடம் ஒன்று வேண்டுமென்று அரசுக்கு இதுவரை அவர் கோரிக்கை விடவில்லை. ஏற்கெனவே ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து, அந்த இடத்தில் தற்காலிகக் குடியிருப்புகளை அவர் ஏற்கெனவே நிறுவி இருக்கிறார். திறப்பு விழாகூடச் செய்துவிட்டார். மேலும் ஒரு பணியாக பாண்டிச்சேரி மாநிலத்திலும் அந்தப் பணியை மேற்கொள்வதற்கு அவர் அன்று செல்கிறார் என்றுதான் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறதே தவிர, தமிழகத்திலே இன்னும் ஓர் இடத்தில் இந்தப் பணியை மேற்கொள்ள கோரிக்கையை அவர் எழுப்பவில்லை. அது தவறான செய்தி. தவறான செய்தியை அவையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கக்கூடாது.

முற்பகல் 11–30

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. விவேக் ஓபராய் அவர்களைப் பொறுத்தவரையில், விளம்பரம்தான் மிகவும் பெரிதாக உள்ளது. அவர் செய்தது மிகமிகக் குறைவு. அவர் உதவி புரிந்ததாகக் கூறப்படும் பகுதிகளில்கூட, அரசாங்கம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்னென்ன சலுகைகளை, உதவிகளை அறிவித்ததோ, அவற்றையெல்லாம் செய்திருக்கின்றது. ஒட்டுமொத்தத்தில் அந்தப் பகுதிகளில் மக்களுக்கு வழங்கப்பட்ட உதவிகளில் 90 சதவிகிதம் அரசால் செய்யப்பட்டது என்றால், 10 சதவிகிதம்தான் திரு. விவேக் ஓபராய் அவர்களால் செய்யப்பட்டது. அவர் சொந்தப் பணத்தைச் செலவழித்து மக்களுக்கு உதவி செய்தார் என்பதெல்லாம் உண்மையான தகவல் அல்ல. மாறாக, என்ன நடந்தது என்றால், அரசு செய்த உதவிகளையெல்லாம் தான் செய்ததுபோல், அவர் விளம்பரப்படுத்திக்கொண்டு, அவர் தனக்கு ஒரு விளம்பரத்தைப் பெற்றுக்கொண்டார் என்பதுதான் உண்மை. அவரே, இப்போது பணம் கொடுக்க முன்வந்தவர்கள், Donors இப்போது பின்தங்கிவிட்டார்கள்; அதனால்தான் தமிழகத்தில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியவில்லை என்று அவரே ஒப்புக்கொண்டு பேட்டியளித்திருக்கின்றார் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். ஆகவே, தமிழகத்தில் அவரால் எதுவும் சாதிக்க முடியவில்லை என்பதற்காகத்தான் பாண்டிச்சேரிக்குச் சென்றிருக்கின்றார். (குறுக்கீடு)

(இ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பரிதி என்ன? கேளுங்கள்.

திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, திரு. பரிதி, இன்று காலையில்தான் என்னிடம் கொடுத்திருக்கின்றீர்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கின்றது. எப்போது எடுத்துக்கொள்ள வேண்டுமோ அப்போது எடுத்துக்கொள்கின்றேன்.

திரு. பரிதி இளம்வழுதி: நாளைக்கு எடுத்துக்கொள்வதாகச் சொன்னால் போதும்.